ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருமுட்டப்

பதிற்றுப்பத்தந்தாதி

இஃது

திருச்சித்திரகூடம்

ப்ரபந்தவித்வான்

ஸ்ரீமாந்

அழகியமணவாளராமாநுஜ

ஏகாங்கிஸ்வாமிகளால் செய்தருளப்பட்டு

கள்ளக்குறிச்சி

ஸ்ரீமாந் தேவராஜராமாநுஜதாசரவர்களாலும்

தூசிலூர்

ஸ்ரீமாந் அரங்கமன்னார்தாசரவர்களாலும்

திருச்சித்திரகூடம்

ஸ்ரீ பராங்குச விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீபராங்குசர் திருவவதாரவருஷம்

௫௲௧௧ ஆகிய சாதாரணஸூ பங்குனிமீ

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமுட்டப் பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

பூமருவு திருமங்கை புணர்மார்ப னுவந்தருளும்
பாமருவு திருமுட்டப் பதிற்றுப்பத் தந்தாதி
மாமருவு மடவுலகில் வழங்கமறைத் தமிழ்செய்த
காமருவு சடகோபன் கழலிணைகள் காப்பாமே.

நூல்

திருமுட்டத் தருள்பொறைநாய்ச்
சியரிருபா திகழலிணையோ
திருமுட்டத் திகிரியிடை
சேரிருகை சிறப்பவொளிர்
பொருமுட்டத் தண்டகற்சொல்
பூவரா கப்பரமன்
கருமுட்டக் கரிசொழிக்கும்
கழலிணைகள் கண்டேனே. (௧)

கண்டுதொழு தெழுவாய்நீ
கனகமணி மாளிகைமேற்
கொண்டறவழ் திருமுட்டக்
கோபுரமீள் கோயிலினுள்
வண்டகவம் புயவல்லித்
தாய்புருட காரத்தால்

பண்டுலகை யிடந்தபிரான்
பணிந்திரப்பொற் பதநெஞ்சே. (௨

நெஞ்சாமுறை செயலொருங்க
நெறிநிற்பார் பொய்பேசார்
வஞ்சகஞ்செய் யாரிகழின்
மாழ்கிடார் புகழ்விரும்பார்
கொஞ்சமுமன் னியர்குற்றங்
கூறிடார் குணங்கொள்வார்
மஞ்சுதவழ் பொழின்முட்ட
மாதவன்ற னடியவரே. (௩)

அவலமுற நிலையில்லா
தலைநெறியாறும் புன்விடய
சவலமுறு மெனமனமுன்
சரணமல ரிணைசார்ந்து
கவலையறக் காத்தருள்வாய்
கடிமதில்சூழ் முட்டமிளிர்
குவலயமுன் னிடந்தளிக்
கோலவுருக் குணக்குன்றே. (௪

குணம்பொறுத்த பெரியார்மீக்
குறைகூறித் திரிந்துபிறர்
பணம்பறித்தாசை சமுசாரப்
பாசத்திற் பட்டுழன்று
பிணம்பொறுத்த வுடல்வளர்க்கு
நீசனெனை யாளுதியோ
மணம்பொறுத்த திருமுட்ட
மாநகர்வாழ் மாயவனே. (௫

மாயசமு சாரமெனு
மாக்கோர துக்கமிகுந்
தீயபெருங் கடலழுந்தித்
திகைத்தேனையா வுலகமெலாந்
தாயனைய தாட்டுணையைத்
தந்துகதை சேர்த்தருள்வாய்
தூயதிரு முட்டமொளிர்
சூகரமாந் தற்பரமே. (௬)

மேதகுசீ முட்டமிளிர்
விண்டுவின்மெய் யடியர்சிரச்
சேதமர செய்திடினுஞ்
சிந்தைதகலங் காமகிழார்
ஏதமறு மேகமிழி
யீரம்புனலை நோக்குறுமச்
சாதகம்போற் பார்த்திருப்பர்
தாடாள னருட்டகவே. (௭)

அருள்பெறுமெய் யடியர்தமக்
கணுவளவு மீந்தறியேன்
றெருள்பெறுமாழ் வார்பதின்மர்
செய்கலைக டேர்ந்துமிலேன்
இருள்பெறுமுந் திரக்குழிக்கே
யேங்கினன்யான் காலமெலாம்
மருள்பெறுமெற் கருண்முட்ட
மன்னுபுகழ்ப் பரஞ்சுடரே. (௮)

சுடர்கொண்ட தொளாதா
சோறுபணங் கூறையென

இடர்கொண்ட வற்பர் தமை
யேத்தியிர வாதினிநீ
தொடர்கொண்ட திருமுட்டச்
சுந்தரத்தோட் டொன்முதலைப்
படர்கொண்ட புகழ்ப்பரனைப்
பரவுதிநீ பாழ்நெஞ்சே. (௯)

பாழும்பு மூக்கணிறை
பஃறீயு மூத்திரமுஞ்
சூழும்புண் ணுருதிரு
தோலுமெலு முந்தசையுந்
தாழும்பெண் ணுடல்விழையுந்
தனிநெஞ்சே சங்காழி
வாழுங்கைத் திருமுட்ட
மாலைவிழைந் துய்வாயே. (௰)

வேறு.

வாய்நாறு மூழலிரு கண்பீளை
காதுசளி வழிந்து நாறும்
நோய்நாறு மூத்திரத்தி னழுறூறும்
யோனியல நாக்க நாறுஞ்
சீய்நாறு முடற்செறிந்த மங்கையரைச்
சீசீயென் றிகழ்ந்து நீயவ்
வேய்நாறுந் தளவமிளிர் திமுட்டத்
திருமாலை விழைவாய் நெஞ்சே. (௧௧)

விழைநோக்க மனநாளும் விண்மொழிகள்
வாய்நோக்க விழிகள் நோக்க

திருமுட்டப் பதிற்றுப்பத்தந்தாதி

உழைநோக்க மங்கையரைச் சுவையுணவை
நாநோக்க வுழல்வே னந்நாள்
மழைநோக்கக் குன்றெடுத்து நிரைகாத்த
திருமுட்ட மாலை யென்றன்
பிழைநோக்க கில்லாம லுனைநோக்கப்
பெரிதருள்செய் பேய னேற்கே.

செய்யபெரு நின்கோயி லனுதினமுங் (கஉ)
காத்தினிது தலஞ்சிய்த் தூய்யப்
பையலெனத் திருமுகப்பே கூவியெனைக்
குற்றேவல் பணிகொண் டாள்வாய்
மெய்யடியன விஜரன்மனை மேவியவன்
சுசிபுருசி விருந்தை யுண்ட
ஐயதிரு முட்டநக ரமர்ந்தருளு
மரிந்தமனே யமரர் கோவே.

கோவாகுஞ் செல்வமதி யார்கொம்மை (கங)
முலைமடவார் மயக்கங் கொள்ளார்
ஓவாகு முடல்பேணு ருன்மத்த
ரானத்திரிவா ருடுப்பார கந்தை
சாவாகுங் காலமெதிர் பார்ப்பாரெப்
பிழைபிறர்செய் தாலு மெண்ணார்
தேவாகுஞ் சிமுட்டத் திருமார
னடிபரவுந் தெள்ளி யோரே.

தெள்ளியமெய்ஞ் ஞானபத்திச் செல்வமிகு (கச)
பலகலைக டேர்ந்த மேலோர்
தள்ளியமுக் குற்றவுண வினையுண்டு
நாமதத்தாற் கொழுத்து மாதர்

ஒள்ளியவேற் கண்வலைபட் டுருகிமுலை
நலம்வேண்டி யுழல்வே னென்னை
எள்ளியறு தரியாநீ டேற்றுநிசி
முட்டமிளி ரிமையோ ரேறே. (௧௫)

இமையவர்சேர் திருமுட்டத் திறைவமறு
வரசென்று மெட்டெழுத்தின்
அமைவுருமுப் பதப்பொருளு மறிந்தவண
மனுட்டான மற்ப மேனுஞ்
சமைதரப்பெற் றுடையனலேன் சாந்தமுத
லானமகுணஞ் சற்று மில்லேன்
இமையளவுங் கொடுங்காம நீக்கமிலே
னுய்யும்வழி நினைந்தா ளாயே. (௧௬)

நினைப்பொருவும் பிறைநினையா தாளவல்ல
தெய்வதமெந் நிலத்து மில்லை
எனைப்பொருவுங் கொடுந்தீய வினைகனப்
பெரும்பாவி யெங்கு மில்லை
கனைப்பொருதண் கடலுலகிற் பிணைவிருந்திட்
டடிதொழுத கண்டா கன்னன்
தனைப்பொருவில் கருணைபுரிந் தாண்முட்டத்
தலத்தெந்தாய் தயைசெய் வாயே. (௧௭)

தாயவனை யுலகெல்லாந் தந்தவனைத்
தண்டுளவத் தாரான் றன்னை
மாயவனைத் திருமுட்ட மாதவனை
யன்பர்வயின் மாலா னானைத்
தூயவனை முநிவர்தொழுந் தொன்முதலைத்
தூமணியைத் தோனான் கானை

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR

மெய்யவனை நனிதொழுவா ரெவரேனும்
விண்ணவரின் மேலார் தாமே. (கஅ)

தாமரைக்கட் டற்பரனைச் சபரிகழித்
தருத்துகனி தானுண் டானைப்
பாமருமூ வுலகனைத்தும் படைத்தருளுந்
திருநாபிப் பதுமந் தானைக்
காமருசீ முட்டமொளிர் கடவுளர்தம்
பெருமானைக் கனலித் தேவை
நீமருவித் தொழுதெழுவாய் விடயவினைந்
துருகிலி நிலலா நெஞ்சே. (கசு)

நெஞ்சமதிற் பரதாரம் பொருள்கவரு
நெறியலது நினைந்து நைந்தேன்
வஞ்சகமபொய் வசைபுகன்றேன் வாளாவற்
பரைத் துதித்து வளர்த்தேன் குக்கி
கொஞ்சமுமஞ் சாதளவில் கொடுஞ்செயல்கள்
செய்திளைத்தேன் கூற்றுக் கஞ்சித்
தஞ்சமென நினைவடைந்தேன் சரண்டந்தாள்
திருமுட்டச் சாமி நீயே. (உ௰)

வேறு

நீயேதொல் லுலகனைத்து நிறைந்து காக்கும்
நிகமாந்தமெய்ப் பொருளென் றுணர்ந்தும் பொல்லா
நோயேயெய் மலவுடலை நோக்கி நாய்போ
லுழைந்துபிறர் கடைதோறும் வருந்திநாளும்
பேயேபோற் றிரிந்துழலும் பிழையே னென்னைப்
பெருங்கருணைக் கிலக்காக்கி யாள்வாய் கால்விண்
தீயேமண் புனலாகித் திகழு முட்டத்
திருநகர்வாழ் கேழலுருச் செங்கண் மாலே. (உக)

செங்கபல்பாய் வயன்முட்டத் திருமா லன்றிச்
சிந்தைசெயார் பிறதெய்வம் வணங்கார் சொல்லார்
மங்கையர்பான் மால்கொள்ளார் மாழ்கார் துன்ப
மலிந்திடினு முடன்மான மகன்றிருப்பார்
சங்கையிலா நட்புபகை பொய் பொறாமை
சழக்குமிகு சினம்விருப்பு வெறுப்பொன் றில்லார்
வெங்கலியைக் கடந்திருப்பார் யாரும் வேண்டார்
மெய்ஞ்ஞான நிலையுணர்ந்த மேலோர் தாமே. (உஉ)

மேலாகும் விண்ணவர்சேர் திருமுட்டத் தான்
மேயவரா கப்பரமே வேறநன் னூர்பால்
மாலாகு மனம்பொறியைந் தடையேன் வாளா
மயங்கியவா றுதிரநரம் போடென்பு
தோலாகு மூத்திரமுட னருவி யோடிச்
சுணங்கனெனத் திரிதலைநா தொலைத்தே தெருட்கள்
நாலாகு மறைபுகழ்பின் னடிக்கண் ணூறும்
நன்னெஞ்சை யெனக்கிந்நா ணிலத்தீ வாயே. (உங)

ஈயெறும்பு குளவிபுழு கழுகு காக்கை
யானைநரி தேள்கழுதை பாம்பு பூனை
நாயெலியே னைபமரங்கல் லொடுமண் டேவ
நரவசுர சன்மமெலா மெடுத்து நானிப்
பாயலைநீர்க் கடல்புடைசூ முலகிற் பட்ட
பாடனைத்தும் போதுமினிப் பரிந்து மற்றோர்
தாயகட்டிற் பிறவாமற் றனைசெய் முட்டத்
தலத்துறையுந் தண்டுளவத் தனித்தா யோயே. (உச

தாரானை வைசயந்தி யாழி சங்கந்
தரித்தானைச் சகமனைத்துங் காப்பான் றன்னைச்

சீரானை முனைநின்ற செங்கண் மாலைச்
சீதரனைப் புண்ணியர்தஞ் சிந்தை யானை
ஏரானை மெய்த்தவந்த வெம்மான் றன்னை
யீடெடுப்பி றபரனை யெழில்சேர் முட்டத்
தாரானைக் கண்களிப்பக் கண்டு துள்ளி
யுருகிநடித் தென்றுகொ[illegible] வுய்யு நாளே. (உரு)

நாளுமறு மாதரையே நம்பிக் கெட்டேன்
நானெனதென் றிருமாந்து நலிவே பட்டேன்
கோளுமறக் கூறளுமுரைத் தறவே யெல்லாங்
கூடிடவே குடிகெடுத்தேன் கொடிதே செய்தேன்
ஆளுமுனை யறுவளவு நினையா தந்தோ
வறக்கொடிய பாதகரை யடுத்து நட்டேன்
வேளுநனி வெள்குமெழின் முட்ட மேய
வெள்ளிவரா கப்பரமே வினைதீர்த் தாளே. (உசா)

தீராத வன்புறுமெய் யடியா ரோடு
சேர்ந்துதிரு முனைநின்றே தேம்பித் தேம்பி
ஆராத களிப்பினிரு கண்ணீர் வார
வழுதழுதுத் தொழுதுதொழு தாடி யோடித்
தாராத பத்திதலை சிறப்பத் துள்ளித்
துள்ளிநிலை மிகைப்புரண்டு துதிப்ப தென்றோ
சாராத புனற்கயத்துட் கயல்பாய் முட்டத்
தொங்கைகர்வாழ்சூகரமாஞ் சுகுணக் குன்றே. (உஎ)

ன்றெடுத்த கோளரியே நந்தன் கொண்ட
குறைவறுஞ்சீர் பெருஞ்செல்வக் கொத்தே முத்தே
ன்றுதைத்த பிருகுமுனிக் கருள்செய் யையே
யற்புதமே யாயர்குலக் கொழுந்தே பொன்னே

கன்றெடுத்து விளவெறிந்த கரும்பே கண்டே
கற்பகமே முட்டமொளிர் கனலித் தேவே
நின்றபிர ணவப்பொருளை நிபிடா னந்த
நீள்சுடரே பிழைநினையா தெனையாள் வாயே. (உஅ)

ஆளாக வுனக்கென்றும் மடவார் பாலந்
தகனாகப் பிறர்மறையிற் செவிடனாகக்
கோளாகப் புறங்கூற்றி லூமை யாகக்
குவலயத்தில் யானிருக்க வருள்கூர்ந் தாள்வாய்
நீளாக மலமலர்ப்பெண் ணிலபெண் காந்த
நீசவிரா வணனெறிந்த நெடுங்கூர் வேலை
வாளாக மேற்றுவிபீ டணனைக் காத்த
வண்மைமிகு திருமுட்ட நகர்வாழ் மாலே. (உகூ)

மால்கொண்ட கன்மமல வுடனா னென்றும்
மற்றவெலா மெனதென்றும் மயங்கி நாளுஞ்
சேல்கொண்ட கருங்கண்ணார் திறத்திற் சிக்கிச்
சிந்தையுரை செய்கையினாற் பாவஞ் செய்தேன்
வேல்கொண்ட வியமனை வெறுத்துச் சீறி
வேதனைசெய் திடவருமவ் வேளை காப்பாய்
சூல்கொண்ட சங்கின்முத் தீனுஞ் செய்சூழ்
தொல்பெரிய முட்டமொளிர் சுருதித் தேவே. (௩௰)

வேறு.

சுருதியி னொலிமாறாதது முட்டத்
தொல்பெரு நகருறை சுகுண
பொருதிரைக் கடல்சூழ் புவிதனைப் பாயாச்
சுருட்டிய பொற்கணா னுடலிற்

குருதியின் றொழுகக் கொன்றமெய்ஞ் ஞானக்
கோலநல் லுருக்கொள்மா கொழுந
தருதியுன் னடியிற் பத்தியெற் கிலங்கத்
தாழ்ந்தனன் சரணென யானே. (௩௧)

யானென தென்னுஞ் செக்கினிற் சுழன்றேன்
யாதுநோக் கினுமெனக் கெனக்கென்
றூனவப் பாழா மாசையிற் கொழுத்தே
னரும்பெரும பாவத்திற் பழுத்தேன்
[illegible]னம ரழியிவ் வுடலினி யெய்தா
தொழித்துநின் [illegible]பதந் தருவாய்
தேனமர் பொழில்சூழ் முட்டமா நகரந்
திகழ்தரு தெய்வநா யகனே. (௩௨)

நாயெனக் குரைத்து மேல்விழுந் திரந்தார்
நடுங்கிட வில்லைசீ சீபோ
நீயென வுரப்பி நெடுஞ்சொலான் மறுத்த
நீசரும் வெறுக்குமா நீசப்
பேயனெற் கருள்வாய் கத்திர பந்து
பெரும்பதம் புகவருள் பெரியோய்
தூயநன் முட்டத் தொன்னக ரமர்ந்த
சுந்தர சுகப்பரஞ் சுடரே, (௩௩)

பரம்பொரு ளரியே பரந்துளன் யாண்டு
மெனச்சிறுன் பகர்ந்தவா றுங்குந்
திரப்பெறு தூணி லக்கணந் தோன்றித்
தீயனு மிரணிய கசிபன்
டரந்தனைப் பிளந்த வரியுரு வத்தா
யொருதிரு முட்டம்வாழ் வேதந்

சிரந்தனி லொளிருஞ் சீதரநீரா
வெண்பவ வினைகடீர்த் தருளே. (௩௪)

அருள்பெறுந் திருமெய் யடியர்போல் வேட
மணிந்துல கத்தினை மயக்கிப்
பொருடனைப் பறித்துப் புல்லரைப் போற்றிப்
புன்புலா லுடலினைப் புரந்தேன்
இருடரும் புவியில் பாவியென் றெப்பா
ரில்லைநா னுய்யுநா ளென்றோ
தெருடரு முட்டச் செல்வமா நகர்வாழ்
திருமகிழ் செங்கண்மா றேவே. (௩௫)

தேவரு மிறைஞ்சு முட்டமா நகரந்
திகழ்திரு மங்கைசேர் மார்பா
மேவரு ஞானத் தமிழ்மறை விளம்பு
மெய்ப்பரா பரவிடையூர்தி
ஓவரு மோட்டு றொழித்தருள் புரிந்த
வுத்தம வொப்புயர் வில்லாய்
காவரு நின்பூங் கழலிணை யளித்துக்
காத்தருட் கயவனேன் றனையே (௩௬)

காத்தரு ளளிக்குங் கருணையங் கடவுள்
கண்ணுத லயன்றொழுங் கடவுள்
கோத்தமா முனிவர் குலந்தொழுங் கடவுள்
குறைவில்சீர் குணகணக் கடவுள்
பூத்தரு பொழில்சூழ் முட்டம்வாழ் கடவுள்
பூவராகப் பெயர்க் கடவுள்
ஏத்தரு மறையின் கடவுண்மா மலர்த்தா
ளிணையடைந் துய்தியென் னெஞ்சே. (௩௭)

நெஞ்சமே பணத்தைச் சிறுதுரும் பென்ன
    நெரிக்கசிற் றோடென நினைப்பாய்
நஞ்சமே நாவுக் குருசியென் றொழிப்பாய்
    நானிலத் தினைறநாற் றுய்போல்
மஞ்சமே யோகி மாதரை மதிப்பாய்
    மறைபுகழ் முட்டமா தவன்றாள்
தஞ்சமே யென்னத் தாழ்ந்தினி தடைவாய்
    சன்மம தொழியுஞ்சத் தியமே. (௩௮)

சத்தியஞ் செய்து பிருகுமார்க் கண்டன்
    றுறுப ராசரன் றருமன்
வித்திய வேத வியாசன்மெய்ஞ் ஞான
    வீடுமன் சுகனெழு வாயோர்
கத்திய பரமே கட்செவி யதன்மேற்
    கண்வள ரருமறைச் சிரமே
நித்திய கயஞ்சோ முட்டமா நகர்வாழ்
    நேமியோய் நீசனேற் கருளே. (௩௯)

நீசனு னழியு நெடும்புலாற் புழுக்
    கூறையுட னிலையென நம்பி
ஆரையாங் கடலு ளழுந்திதாய் தந்தை
    யனுசன்று ரம்மக வெனுமப்
பாசமாம் பிணியிற் பட்டொழிந் தேனுன்
    பாதமே சரணமென் றடைந்தேன்
தாரனு மெனைக்காத் தருடிரு முட்டத்
    தனிநக ருகந்ததற் பரனே. (௪௰)

வேறு.

தற்ப ரன்பரந் தாமன்று மோதரன்
றான வர்ச்செறுந் தார்க்கிய கேதனன்
கற்பொ ருப்பல்வா ணாசுரன் கைகளைக்
கண்ணு தல்காணக் கட்டழித் தாண்டவன்
பொற்ப றமபொலி முட்டம்வாழ் புண்ணியன்
பூவ ராகன் மலர்ப்பதம் போற்றிவாழ்
சொற்பெ ருந்தொண்டர் தூயபொற் றாளிணை
தொண்டுசெய்துதொழுதெழென்னெஞ்சமே. (சக)

நெஞ்ச ணைந்துக ரைந்துகண் ணீருக
நேமி கீண்டது மாநிரை மேய்த்ததும்
பஞ்ச வர்க்குத்தூ தானதும் பார்த்தன்றேர்ப்
பாக னாயதும் வெண்ணெய்பா லுண்டதுந்
தஞ்ச மாகச்சீ முட்டத்த மர்ந்ததுஞ்
சாலப் பாடிக்கூத் தாடுமெய் யன்பர்தம்
எஞ்ச லில்குழுக் கண்டிடக் கூடுமே
லிருநி லத்தது கண்பய னாவதே. (சஉ)

ஆவ லாகப் பிச்சையேற் றாயினு
மனுதி னம்பசி நோயவித் துக்கொடு
சீவ ராக நயினா ருகந்திடுஞ்
சீமுட் டத்தலஞ் சேர்ந்தங் கிருந்திடிற்
பாவ மானவை யாவும் பறந்துபோம்
பரவை சூழுல கிற்பவ மோயுமால்
தேவ ராகிய நித்தர் திகழ்வதாந்
தெளிவி சும்புசித் தித்திடுந் திண்ணமே. (சங)

திண்டி றற்பொறை ஞானமெய்ப் பத்திசால்
தேசு றும்பல் கலைதெளி சீரியோர்
கண்டி ருக்கறு நெஞ்சந் தயங்கபொய்த்
தவறு கூறியெஞ் ஞான்றுஞ் சகத்தினிற்
பண்டி யைவளர்க் கும்படு பாவிநான்
பதக னெற்றுன் னருணேர் படுங்கொலோ
வண்டி மிர்பொழில் சூழ்முட்ட மாதவ
வைய மேழிரண் டுண்டசெவ் வாயனே. (சச)

வாயி லிட்டநீர் வாரம னந்தடு
மாற வச்சுறக் கூற்றுயிர் வௌவுநாள்
தாயின் மக்கடந் தைதமர் தாமழச்
சவமெ னப்படை சாத்திச் சுமந்துபோய்ப்
பேயி லென்றுவை குப்பிணக் காட்டினிற்
பெரிது நாய்நரி பேணியு வந்திடத்
தீயின் பண்டியுட் சேர்ப்பதன் முன்னமே
சீமுட் டத்தவற் சிந்தைசெய் துய்ம்மினே. (சரு)

உய்ய லாகுமு பாயமற் றொன்றிலை
யுவரி சூழுல கின்கணொன் னுள்ளமே
செய்ய ஞானந் திருந்துசீ முட்டம்வாழ்
திருவி னாயகன் றெய்வசி காமணி
பையரா வணைத் தற்பரன் றூடொழும்
பரம பாகவ தாபிமா னம்மலால்
பொய்ய லாதவர் புண்ணிய பொற்பதம்
போற்றி நீயடை வாய்புக லாகவே. (சசு)

ஆக மாவக லாதப ராபர
    வறந்தி ருந்துமுட் டத்தம ரச்சுத
மோக ராகது வேடமு ளைத்தறு
    மூத்தி ரம்மல நாற்றமு திர்ந்தறு
காக நாய்வெளி யாகிற்கெள வும்புலால்
    கனத்த தென்புதி ரங்தோல் கலந்தறு
தேக நானிதை வீணிற்சு மந்தினி
    திகைத்தி டாதருண் முத்தித் திருவையே (௨௭)

திருவி லாதபொய்த் தெய்வதம் போற்றுவார்
    சிலர்ச கத்திற் றிருவுடைச் செங்கண்மால்
பொருவி லாதமுட் டத்துவாழ் பூபதி
    புனித வேதபு ராதன புண்ணியன்
செருவி லாதவன் றேர்மறை நேயபான்
    செல்வ நாரணன் றின்கழ லேத்திடார்
கருவி லாதரக் காட்சித் திருவறக்
    காலம் வீணிற் கழிப்பரென் கன்மமே. (௨௮)

கன்ம மன்னுகா சாசை கடிந்திலேன்
    கனவி லுங்கொடுங் காமங்க ளைந்திலேன்
வன்ம மன்னும னத்திற்பொ றாமைபொய்
    வஞ்ச மச்சரம் வெஞ்சின மாய்த்திலேன்
சன்ம மன்னுமென் றஞ்சிநின் றுளிணை
    சரண மென்றடைந் தேன்றயை செய்தருள்
தன்ம மன்னுமுட் டத்தலஞ் சார்ந்தபொற்
    சக்க ரக்கைச் சனார்த்தனச் சாமியே. (௨௯)

தனமடர்ந்த மடந்தையர் தங்கணுந்
தாவு வேற்படை தாக்கத் தயங்கினேன்
மனமடர்ந்த மதியையல் குல்லெனும்
வல்ல நாகம்வி ழுங்கிட மாழ்கினேன்
சினமடர்ந்த சிறியனு மென்னைநின்
றிருவ ருட்கிலக் காக்கியாள் செய்யறந்
தினமடர்ந்தமுட் டத்தெழுந் தீதர
தீத கன்றநல் வேதியர் தெய்வமே. (நிய)

வேறு.

வேதியர் மறையோ தோசை
விழாவோசை வேள்வி யோசை
தீதற வயருஞ் சீசா
திருமுட்டஞ் சேர்ந்த செல்வா
கோதற வாண்டாள் சூடிக்
கொடுத்தமா மணங்கொண் மாலை
ஆதரத் துகந்து சூடு
மழகவெற் கருள் செய்வாயே. (நிக)

வாய்மைநல் லொழுக்க மில்லேன்
மானம்வெஞ் சினத்திற் பொல்லேன்
தூய்மைசற் றகத்தி லில்லேன்
சூதன்யா னடுவே யில்லேன்
வெய்மையந் தாரஞ்சேர் முட்ட
மேயபா ரிடந்த வேந்தே
செய்மையம் மலர்த்தா ளேத்துஞ்
சிந்தையெற் கருள்செய் நீயே, (நிஉ)

செய்யமுட் டத்துட் செவ்வாய்
    தெற்குறத் திகிரி சங்கார்
கையிடை மருவ மேல்பாற்
    கமலக்கண் ணோக்க நிற்கும்
ஐயனைத் தொழுது பாடி
    யழுதுள்ள முருகி யாடி
வையகம் புரண்டு வாழ்த்தும்
    வாழ்வுகாண் மேலாம் வாழ்வே. (௫௩)

வாழ்வுதான் வாய்க்குங் கொல்லோ
    மாபாவ வறிஞ னேற்குத்
தாழ்விலா முட்டத் தார்ந்த
    தனிமணி வண்ணன் கண்ணன்
ஏழ்விடை யடர்த்த வெந்தை
    யிருங்குண கணப்பே ராழி
ஆழ்திரு வடியார் தாளுக்
    காட்பட்டு நிற்கு மாறே. (௫௪)

மாறிலாப் பாவி யேனை
    வன்கண்ண ரைவர் பற்றித்
தேறிலாக் கள்ள வுள்ளந்
    திசைக்கரின் றடர்க்க நொந்தேன்
ஈறிலா வின்பச் செல்வ
    மீந்தருண் முட்டத் தேய்ந்த
வேறிலாக் கருணை மேவும்
    விழுடை யிமையோர் வேந்தே. (௫௫)

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

வேந்தனே யிமையோர் போற்றும்
விமலமா முட்டம் வாழ்வே
தாந்தனே பலவா மண்ட
சராசர நிறைந்து காக்குஞ்
சாந்தனே சருவ சான்றே
தாமரை மலர்மேன் மங்கை
காந்தனே களைவாய் நாயேன்
கடுவினை களைக ணீயே. (௫௬)

களைகண்மற் றில்லே னென்றேய்
களையினுங் களையா யேனும்
வளைகனற் றிகிரி யேந்தும்
வலவதாய் தந்தை காலில்
தளையறத் தோன்றுந் தாமோ
தரவெழிற் றிருமுட் டத்தாய்
அளைவெண்ணெய் பாலொருட் டுண்ட
வருங்கள்வா வாய ரேறே. (௫௭)

கள்வன்யான் கயவன் பொய்யன்
காமுகன் கடுங்கோ பத்தன்
உள்வன்மை யொழிந்தி லேனென்
னூழ்வினை யொழித்தாட் கொள்வாய்
முள்வன்றுண் முளரிப் பொய்கை
முட்டத்துண் முகுந்தா வஞ்சப்
புள்வல்வாய் பிளந்த மாயா
பொற்கையேந் தாழி யோயே. (௫௮)

ஆழிக்கண் ணனந்தன் றன்மே
லனந்தல்செய் யனந்த னன்றே
றேழுக்க வாகச் செற்ற
லேதயின் முட்டத் தெந்தை
ஊழுக்க தறியான் டன்ற
றுரைசொல மனம்வா யில்லாத்
தாழிகரு மோக்கந் தந்த
தகவுரை தகைமைத் தாமே. (௫௯)

தாமத்தா னுரலோ டாய்ச்சி
தளைந்திடத் தளையுண் டேங்கும்
வாமத்தாய் முட்டம் வைகும்
வராகமா வுருவத் தேவே
ஈமத்தா டியவவ் வீச
னிரப்பொழிக் காண்ட வெந்தாய்
காமத்தாற் கலங்கா தியானுன்
கழலெழுக் காத்தாள் வாயே. (௬௰)

வேறு.

காத்த ளிக்குங்கண் ணாகரிக் கட்டையைக்
கோத்த லத்துக்கெ னச்செய்கு ணாகரா
பூத்த பொய்கைமுட் டந்திகழ் புண்ணிய
வத்த னின்னையெற் கின்னரு ளீதியே. (௬௧)

ஈதி யுன்கழற் பத்தியெ னக்கிறை
ஆதி யென்றுமை யானைக்க ருள்புரி
வேதி யர்திகழ் முட்டத்துண் மேவிய
கோதி லம்புய வல்லிதன் கொண்கனே. (௬௨)

கொண்க னம்மலர் மங்கைகு லாவிய
தண்க யந்திகழ் முட்டத்த லத்துவாழ்
எண்க டந்தவெ ழிற்குணத் தெந்தைதன்
ஒண்க ழலெழு வூழ்வினை யோயுமே. (௬௩)

ஓயு மிவ்வுட லோம்பிப்ப சாசும்புன்
றோயு மென்னவ லைந்துந லிந்துநான்
வாயுங் குக்கிவ ளர்த்தமா பாவியாள்
நீயு முட்டத்து ணின்றபொன் னேமியோய். (௬௪)

நேமி தன்னையி டந்தரு ணின்மலா
பூமி யின்முட்டப் பொன்னகர் மேவிய
சாமி பொய்யன்ச ழக்கன்சி னத்தன்கொங்
காமி யென்னைக்க டைக்கணித் தாள்வையே. (௬)

தாள்ப ரப்பிமண் ணும்விண் ணுந் தாவிய
சூள்ப ரப்பிமு னிவோர்தொ ழும்பரா
வாள்ப ரப்பிய முட்டம்வாழ் மாபபான்
கோள்ப ரப்பிய கூரருள் வாய்கொலோ. (௬௬)

கொல்லும் வல்லயிற் கண்மலர்க் கொம்பனார்க்
கல்லு மெல்லு மகங்குழைந் தல்கலில்
தில்லும் பொல்லுஞ்செய் தேற்கருண் முட்டஞ்சேர்
நல்லு மெல்லிய லாங்கழற் கத்தனே. (௬௭)

கத்த னுக்குமுட் டத்துட்பொன் காந்தற்கு
சித்த னுக்குத்தி ருநெடு மாலுக்குச்
சுத்த னுக்குச்சு கமனத் தன்பர்க்குப்
பித்த னுக்குப்பித் தரல்லர் பித்தரே. (௬௮)

அல்ல லாமெனத் தோற்றிய வாலென
நல்ல தாரம்மக் கள்கிளை நன்னிலம்
இல்லம் யாவுஞ்சு டுமேலவர்க் கெலாம்
வல்ல முட்டமால் வைகுந்தங் கையதே. (சுகூ)

கையி லங்குபொற் சக்கரக் கையனை
மெய்யி லங்கும லர்த்திரு மெய்யனைச்
செய்யி லங்குமுட் டந்திகழ் செய்யனைப்
பொய்யி லங்குநான் போற்றலும் பொய்யதே. (எ0)

வேறு.

பொய்யுணர்வடர் வதுபுலால் புறத்திடு
வதுபுனை யுடைநீங்கில்
வெய்ய தீவினை வேரது நோயது
மூத்திர மலம்விளையுஞ்
செய்ய தென்புதோல் சீயுதி ரத்தது
தேகநா னிதைச்சுமந்து
வைய கந்தனிற் பிறந்துழ லாதருண்
முட்டம்வாழ் மாதவனே. (எக)

மாத ரார்முடை மலப்புலா லுருவினை
மகிழ்ந்துமால் கொடுநாளுங்
கோத ருதவல் குல்லெனு மூத்திரக்
குழியில்வீழ்ந் திடவோடிக்
காத லார்ந்திடக் கனவினு மலைந்திடுங்
கயமைகூர் மடநெஞ்சே
வேத மாதவன் முட்டமா லுருவினை
வினவுபவ மொழிவாயே. (எஉ)

மொழிக டந்தசீ முட்டமா நகர்திகழ்
    மொய்துழாய் முகுந்தாவோ
வழிக டந்தகார் வண்ணனே கண்ணனே
    வானவர்க் கரசேயோ
சுழிக டந்தமா சுந்தர வெள்ளநற்
    சோதியி னுருவேயோ
பழிக டந்தயான் பாவியே னருள்செய்வாய்
    பதமலர் பணிந்தேனே. (எ௩)

தேன மர்ந்தபூஞ் சோலைசேர் முட்டமா
    நகருறை திருவாளா
கான மர்ந்தவே டனைத்துணை கொண்டருள்
    கருணையங் கடலரசே
வான மர்ந்தவவ் வணங்கிடா வமரர்கள்
    வணங்கிடு மலர்த்தாளோய்
ஊன மர்ந்தவொப் பறும்பெரும் பாவியெ
    னுடற்பிறப் பொழித்தருளே. (எ௪)

ஒழிவில் காலமெல் லாமுடன் மன்னியுன்
    னுபயபொற் றுண்மலர்க்கே
வழுவி லாவடி மையைப்புரிந் தடியனேன்
    வாழுமா றினிதருள்வாய்
கழிவி லாவருட் காரணா முட்டமாங்
    கடிநக ருறைகண்ணா
அழிவி லாரண முறைந்திடு மையபொன்
    னாழியங் கையரசே. (எ௫)

அங்கை யார்ந்தவைந் தேதியா யன்றுநற்
    றுமென வணைந்தவடன்

கொங்கை யார்ந்தநஞ் சுண்டகோ பாலனை
கோதிலா நறுங்குளிர்நீர்க்
கங்கை யார்ந்தபொற் றாளனை கடிநகர்
முட்டம்வாழ் கருத்தாவே
சங்கை யார்ந்தவென் சன்மத்தைப் போக்குவாய்
தரணியிற் சரணியே. (௭௬)

சரண மென்றடை யைவர்தம் பொருட்டிகற்
சதத்தர்பா ரதசமர்வாய்
மரண மன்றடைந் திடப்புரி மாயனை
மருதுதை மலர்த்தாளோய்
கரண மொன்றமா தவர்புகழ் முட்டமார்
கண்ணனே பாழ்ம்பணத்தைத்
திரண மென்னவெண் ணிடத்தகுஞ் சிந்தைதந்
தொழித்தியென் றீவினையே. (௭௭)

தீவி னைதவிர்த் தாண்டிடுஞ் செல்வனைச்
சீமுட்டத் திருமாலை
பூவி னையிடந் தருள்புரா தனன்றனைப்
பூவராகப் பரனைத்
தேவி னைத்திரு வாளனை யடியர்தஞ்
சிந்தையிற் றிகழ்வானைக்
கோவி னையினைந் துருகிக்கூத் தாடுநா
ளென்றுகொல் கூடுவதே. (௭௮)

கூடு மாசையிற் கற்பின்மா தரைமனங்
கொண்டனன் பிறர்குற்றங்
கோடு மாசையிற் பெரியர்மேற் கோட்சொலிக்
கொழுத்தனன் பாழ்ம்பணத்தைத்

தேடு மாசையிற் சிறியரைப் புகழ்ந்தனன்
செல்கதிக் கமைந்துளோனான்
நாடு மாசையி லடைந்தன னருடிரு
முட்டம்வாழ் நாரணனே. (௭௯)

நார ணன்றனை நான்மறை புகழ்திரு
முட்டநன் னகரானைக்
கார ணன்றனை யுலகெலாங் காத்திடுங்
கடிமலர்க் கண்ணனை
ஆர ணன்றனக் கருமரு ளாளனை
யடியவர்க் கெளியானைப்
பூர ணன்றனைப் போற்றுவார் சித்தரிற்
பொலிவுறும் புண்ணியரே. (௮௰)

வேறு

பொலியுநன் முட்டம்வாழ் பூவ ராகனை
எலிமைமா லெயிறியள வியற்று மீரனை
அலியுமா னாமமெனு மல்ல னாகிய
ஒலிகடல் வண்ணனை யுளளெ னுள்ளமே. (௮௧)

உள்ளமே முட்டம்வா ழூழி மாயனைக்
கள்ளமே யவர்க்குஞ்செய் கருணை யான்றனைப்
பள்ளமேய் கொக்கின்வாய் பகிர்ந்த வன்றனை
வெள்ளமே யவனையெண் வினைக ணீங்குமே. (௮௨)

நீங்குறும்வல் வினைமக திகழு முட்டம்வாழ்
தாங்குசக் கிரதனைச் சகம ளக்குமுன்
ஓங்குநற் பரமனை யுள்ளு மன்பரைப்
பாங்குடன் பதமலர் பணிந்து போற்றவே. (௮௩)

போற்றரு முட்டம்வாழ் புனித மாதவ
காற்றனல் புனல்நிலங் காய மாகிய
ஆற்றலம் மாயசெய் யருளை டைந்தனன்
ஊற்றமோ டெயரின் னுயர்ப தத்தையே. (அ௪)

உயர்வற வுயர்நல முடைய வுத்தமன்
அயர்வறு மமரர்க ளதிபன் முட்டமார்
பெயர்வற மண்கொள்பற் பிறைகி டிப்பிரான்
மயர்வறு மாட்சிமை வழங்கற் பாலதே. (அ௫)

வழங்குநான் மறைபுகழ் வரத கேசவ
முழங்குவாச் சியமரு முட்ட மாதவ
தழங்குசக் கரந்திகழ் தடக்கை நாரண
பழங்கணோய் தவிர்த்தெனைப் பாலிக் தாள்வையே.

வையமுண் டாலிலை மகவெ னத்துயில்
ஐயமுட் டத்துள்வா ழழக வைவர்தந்
தையலுக் குடைமிகத் தந்த வைம்படைக்
கையவெற் குனகழற் காத லீதியே. (அ௭)

காதல்செய் யடியவர் கருத்த கல்கிலா
மாதவ முட்டம்வாழ் மதனு முட்கிடும்
ஓதநீர் வண்ணபச் சோந்தி மன்னனைப்
பூதலத் தருள்பர புரத்தி யென்னையே. (அ௮)

புரந்தருள் காமுகன் பொய்ய னென்னைநீ
உரந்தரு முட்டம் வாழொருவ வொப்பிலா
வரந்தரு நாரண வாயசத் தொரு
சிரந்தரு கருணைகூர் தேவ தேவனே. (அ௯)

தேவரு மனஞ்செயுஞ் செல்வ மோங்கிய
மாவரு முட்டம்வாழ் வராக தற்பர
மேவரு வீடருள் வேத நாயக
ஓவரு மென்பிறப் பொழிவித் தாள்வையே. (௯௰)

வேறு.

ஒழித்து வாசனை யொடுபுறப் பற்றெலா முலகைப்
பழித்துப் பொய்யழுக் காறறப் பாற்றியாங் காரம்
அழித்து முட்டமா ரரிதிரு வடிகளிற் பத்தி
செழித்து நிற்குஞ்சீ ரியரம ரரினுஞ்சீ ரியரே. (௯௧)

சீர்ம லிந்தசீ முட்டமார் திருவினுக் கரசே
தார்ம லிந்தநற் றண்டுழா யணிந்தநற் பரமே
யார்ம லிந்தவொப் பற்றமா பாவியா னெனினும்
ஏர்ம லிந்தநின் னருட்கிலக் காக்கியா ளெனையே. ()

எண்பெரும்பிழையெழுதொறுந்திசைக்கவுமொண்ணு
துன்பெருங்கருணையிற்பொறுத்தாழ்வினையொழிப்பா
யின்பு றுந்தம ரேத்தசீ முட்டமேய்ந் திலகும்
அன்பு றுந்தமி ழாரணம் புகழ்திரு வரசே. (௯௩)

திருப்பொ லிந்தநின் செழுமலர் முளரிச்சே வடிகள்
[ருள்வாய்
கருப்பொ லிந்தயா னடைந்துயக் கடைக்கணித்
மருப்பொ லிந்தபூம் பொழில்வளர்முட்டமாநகர்வாழ்
உருப்பொ லிந்தமா மலர்மக ளுறைதரு முரத்தோய்.

ஓய்ந்தெ னூழ்வினை யுலகினி லுய்யுமா றருள்வாய்
ஆய்ந்த வந்தண ரமர்திரு முட்டம்வா ழழகா
ஏய்ந்த வன்பர்தம் மிதயம்வா ழிறைவனே பரவை
காய்ந்த கால்விசி ராமனே கருணையங் கடலே. (௯௫)

கடந்த ஞானிபோற் காட்டுவ னடித்தல கறிய
அடர்ந்த பத்திபெற் கற்பமு மில்லையாள் வாயோ
படர்ந்த னைப்பெறு நாகமே படுத்தமா தவபார்
இடந்த வேனமா மிறைவசீ முட்டம்வா ழெந்தாய்.()

தாயுந் தந்தையுந் தானுமே யனையுந்தனக் கென்றும்
ஆயுங் காற்றுணை யன்றுநற் றஞ்சமா யழியாத்
தாயுந் தந்தையுந் தானுமற் றனைத்துமாக நாவார்
வாயு முட்டமா தவன்பத மடைவது வலமே. (கஎ)

வல்ல மாமுனி வார்புகழ் முட்டமா நகர்வாழ்
நல்ல மாமறை நவிற்றுமே னத்துரு நாதா
அல்ல லார்ந்தவ டாதன வனுதினம் புரிந்த
புல்லன்யானையி வழுபொறுத்துவந்தெனைப்புரந்தருளே

அருள்பு ரிந்துநின் னடியர்தம் மடியர்க்காட் படுத்திப்
பொருள்பு ரிந்தெனைப் புரந்தருள் புயன்மணி வண்ணா
உருள்பு ரிந்தவச் சகடத்தை யுதைத்தகா ரூவாய்
தெருள்பு ரிந்தசீ முட்டமார் தெய்வத்துக் கரசே (க௯)

தெய்வத் தாக்கர செழிற்றிரு முட்டமவாழ் செல்வன்
ஐவ ணத்தடி மிசையழ கியமணா வாளன்
உய்வ ணத்துரைத் திட்டபா மாலையிம் முறைப்பார்
செய்வி னைதனைத் தெய்துவர் வைகுந்தத் திருவே.(௨௰)

திருமுட்டப்பதிற்றுப்பத்தந்தாதி

முற்றுப்பெற்றது.

தேவதேவஸ்ரீபூவராகபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்தேவுரவராயபரமதயாகுரவே நம:

பக்கம்	வரி	சேர்பிரிவு
14	7	ராகன்ம
ஷை	18	ஆவ லாகப்பிச் / சையையேற்
ஷை	20	சீவ ராகந யினுரு
ஷை	21	சேர்ந்தங்கி
ஷை	22	யாவும்ப
ஷை	23	
15	2	றம்பல்க
ஷை	3	நெஞ்சந்த
ஷை	4	ஞான முஞ்ச
ஷை	6	னெற்குன்ன / ருணர்ப
16	10	கத்திற்றி
ஷை	15	காட்சித்தி
ஷை	16	வீணிற்க
ஷை	17	சாசைக
17	1	டர்ந்தம
ஷை	2	தாக்கத்த
ஷை	3	டர்ந்தம
ஷை	5	டர்ந்தசி
24	18	பூவரா கப்பரனேக்

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
14	18	பிச்சை	பிச்சையை
15	12	னப்படை	னப்பாடை
	16	டத்தவற் சிந்தை	டத்தர செய் / கைச்சிந்தித்
20	3	வாகச் செற்ற	வடர்த்த வீச
	4	வேத	னேத